இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 12-11-2025

# பதறும் ‘கொடநாடு’ பழனிசாமி!

கொடநாடு விவகாரம் குறித்து செங்கோட்டையனும், டி.டி.வி.தினகரனும் அளித்துள்ள பேட்டிகள் ‘கொடநாடு’ பழனி சாமியை பதற வைத்துள்ளது.

**“கொடநாடு விவகாரத்தில் பழனிசாமி தான் ஏ1. அம்மாவின் பங்களாவில் நடந்த கொலை, கொள்ளை வழக்கை முறையாக விசாரிக்க வேண்டும் என்று பழனிசாமி ஏன் வலியுறுத்தவில்லை? சி.பி.ஐ. விசாரணைக்கு ஏன் கேட்கவில்லை?” என்று கேள்விகளை அடுக்குகிறார் அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன்.**

**டி.டி.வி. தினகரன் அளித்துள்ள பேட்டியில், “கொடநாடு எஸ்டேட்டில் நகைகளோ, பணமோ, பொருட்களோ இருக்காது என்று தெரிந்தும் அங்கே கொலை, அதைத் தொடர்ந்து தற்கொலை நடந்துள்ளது. இவை அனைத்தும் எடப்பாடி பழனிசாமி ஆட்சியில்தான் நடந்துள்ளது. அன்றைய காலக்கட்டத்திலேயே அந்த கொலை வழக்கில் பல தடயங்கள் அழிக்கப்பட்டதாக தகவல் வந்தது. அம்மா ஜெயலலிதா அவர்கள் பலரையும் பற்றி விசாரிப்பார். அப்படி விசாரிக்கப்பட்ட தகவல்களை பச்சை கவரில் வைத்திருப்பார். இவர்களது லீலாவினோதங்கள் அதில் இருக்கும். இதை வைத்து அதிரடி நடவடிக்கைகளை எடுப்பார். அம்மா மறைவுக்குப் பிறகு எனது சித்தி சசிகலா அறிவுறுத்தலின் பேரில் கொடநாட்டில் உள்ள ஆவணங்களை நான் பார்த்தேன். அந்த ஆவணங்களில் சிலரைப் பற்றி வந்திருந்ததையும் பார்த்தேன். அ.தி.மு.க. காலத்து அமைச்சர்கள் பற்றிய கடிதங்கள் அதில் இருந்தன. இந்த கோப்புகளைத் தேடித்தான் கொடநாட்டில் கொலை, கொள்ளை நடந்தன. இதனை நான் சொன்னால் எதற்காக பழனிசாமி பதறுகிறார்?” என்று கேள்வி எழுப்பினார்.**

செங்கோட்டையன், டி.டி.வி.தினகரன் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு, குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாக பதில் சொல்ல முடியாத பழனிசாமி, ‘கொடநாடு வழக்கை வைத்து என்னை யாரும் மிரட்ட முடியாது’ என்கிறார். பழனிசாமியை யாரும் மிரட்டவில்லை. அவராக ஏன் மிரள்கிறார்?

இன்றைக்கு சட்டம் ஒழுங்கை வாய்கிழியப் பேசுகிறாரே பழனிசாமி, அவரது ஆட்சியில்தான் கொடநாடு சம்பவம் நடந்தது.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு 2017 ஏப்ரல் 24ஆம் நாள் நள்ளிரவில் கொடநாடு தேயிலைத் தோட்டத்தின் ஒன்பதாவது எண் நுழை வாயிலில் 11 பேர் கொண்ட மர்ம கும்பல் நுழைகிறது. ஓம் பகதூர் என்ற காவலாளியைக் கட்டிவைத்து விட்டு எஸ்டேட்டுக்குள் இந்த கும்பல் நுழைகிறது. இந்த ஓம் பகதூர் மூச்சுத்திணறால் இறந்தே போகிறார். பங்களாவில் உள்ள மிக முக்கியக் கோப்புகளை திருடிச் சென்று உள்ளார்கள். இந்த 11 பேர் கும்பலில் பெரும்பா லானவர்கள் கேரளாவில் இருந்து வந்தவர்கள். கேரள மாநிலத்தைச் சேர்ந்த சயான், வாளையார் மனோஜ் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டார்கள். இதில் ஒருவர் சேலத்தைச் சேர்ந்த கனகராஜ். இவர் ஜெயலலிதாவின் கார் டிரைவராக இருந்தவர்.

**“கொடநாடு பங்களாவில் சில சின்னச் சின்ன பொருள்கள் காணாமல் போனது. அவையும் கீழே கிடந்து எடுக்கப்பட்டு விட்டது, கைப்பற்றிவிட்டோம்” என்று பழனிசாமி அரசு சொன்னது.**

ஜாமீனில் வெளியில் வந்த சேலம் கனகராஜ் மர்மமான முறையில் இறந்து போனார். அவர் கொலை செய்யப்பட்டதாக அவரது உறவினர்கள் பேட்டிகள் கொடுத்தார்கள்.

இந்த வழக்கின் இரண்டாவது குற்றவாளியான சயான் என்பவரது மனைவியும் மகளும் மர்மமான முறையில் விபத்தில் சிக்கி மரணம் அடைந்தார்கள். இதில் சயான் மட்டும் தப்பினார். இந்தச் சம்பவம் நடந்த 15 ஆவது நாள் கொடநாடு தேயிலைத் தோட்டத்தில் வேலை பார்த்த தினேஷ் குமார் என்பவர் தற்கொலை செய்து கொண்டார். இப்படி ஐந்து பேர் மரணம் அடைந்த மர்மமான வழக்குத்தான் இந்த கொடநாடு வழக்கு.

**ஜாமீனில் வெளியில் வந்த சயான் என்பவரும் வாளையார் மனோஜ் என்பவரும் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் இறந்து போன கனகராஜுக்கும் முதலமைச்சர் பழனிசாமிக்கும் இதில் தொடர்பு இருக்கிறது என்று பகிரங்கமாகக் குற்றம்சாட்டினார்கள்.**

‘முதலமைச்சரின் பெயரை கனகராஜ் எங்களிடம் பயன்படுத்தினார்’ என்று அவர்கள் சொன்னார்கள். தங்களுக்கு உதவியதாக சஜீவன் என்பவர் பெயரையும் சயானும் வாளையார் மனோஜும் சொல்லி இருக்கிறார்கள். இந்த சஜீவன், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நீலகிரிக்கு வந்த போது அரசு விழாவில் அருகில் இருந்தார்.

உதகையில் உள்ள விருந்தினர் மாளிகையில் நடைபெற்ற கொரோனா தடுப்பு ஆலோசனைக் கூட்டம், உயரதிகாரிகளுடன் வளர்ச்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், அரசுக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா ஆகிய மூன்று நிகழ்ச்சிகளிலும் சஜீவன் கலந்து கொண்டார். இந்த சஜீவன், அவரது தம்பி சுனில் ஆகிய இருவர் பெயரும் நீதிமன்ற விசாரணைக்கே வந்தது. அந்த நிலையில் சஜீவனுக்கு அ.தி.மு.க. மாநில வர்த்தகர் அணி அமைப்பாளர் பதவியும் நீலகிரி மாவட்ட தேர்தல் பொறுப்பும் வழங்கினார் பழனிசாமி. இந்த நியமனத்துக்கு எதிராக அ.தி.மு.க.வினரே கோத்தகிரி எம்.ஜி.ஆர். சிலை முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

முதலமைச்சர் பழனிசாமி மீது குற்றம் சாட்டினார்கள் என்பதால் சயானும் மனோஜும் சிறையில் தாங்கள் சித்ரவதை செய்யப்படுவதாக அப்போது புகார் கூறினார்கள். ஜெயலலிதாவின் கார் டிரைவரான கனகராஜின் அண்ணன், இந்த விவகாரத்தில் பழனிசாமியை விசாரிக்க வேண்டும் என்று அப்போதே பேட்டி கொடுத்தார்.

**இந்த நிலையில் அ.தி.மு.க. ஆட்சி முடிவுற்று, 2021–ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. 2021 ஆகஸ்ட் 17–ஆம் தேதியன்று, கொடநாடு கொலை, கொள்ளை விவகாரத்தில் கூலிப்படையைச் செயல்படுத்தியதாகச் சொல்லப்படும் சயான் என்பவர் ஊட்டி காவல்துறையில் ரகசிய வாக்குமூலம் அளித்தார். மறுநாள் 18 ஆம் தேதியே கருப்பு பட்டை அணிந்து சட்டசபைக்குள் வந்தார் பழனிசாமி. ‘எனக்கு எதிராக சதி செய்கிறது தி.மு.க. அரசு’ என்று சொல்லி வெளிநடப்பு செய்தார். 19–ஆம் தேதி ஆளுநர் மாளிகைக்கு ஓடினார். வெளியில் வந்து பேட்டி தருகிறார்.**

**“சயான் வழக்கு முடியும் தருவாயில் உள்ளது. இதை மீண்டும் விசாரித்து வருகிறார்கள். பழிவாங்க இதை ஜோடிக்கிறார்கள்” என்று பதறினார் பழனிசாமி. நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் எப்படி பதறினாரோ அதே பதற்றத்துடன்தான் இப்போதும் இருக்கிறார் பழனிசாமி.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.11.2025) தலைமைச் செயலகத்தில், Flextronics Technologies நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி ரேவதி அத்வைதி அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) சென்னை, நந்தனம் மெட்ரோ இரயில் நிறுவன கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்ற 170 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி சான்றிதழ்கள், ஊக்கத்தொகை காசோலை மற்றும் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில், சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குனர் கிராந்தி குமார் பாடி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்கள் உடனிருந்தனர்.

### விருதுநகர் மாவட்டத்தில் ரூ.61.74 கோடியில் சிவகாசி – திருவில்லிபுத்தூர்

# இரயில்வே மேம்பாலத்திற்கு ‘தியாகி சங்கரலிங்கனார்’ பெயர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – காணொலி வாயிலாக திறந்து வைத்து சூட்டினார்!

**சென்னை, நவ. 12 – விருதுநகர் மாவட்டத்தில் 61 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் சிவகாசி மற்றும் திருவில்லி புத்தூர் இரயில் நிலையங்களுக்கிடையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சாலை மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, அப்பாலத்திற்கு தியாகி சங்கரலிங்கனார் மேம்பாலம் எனப் பெயர் சூட்டினார்.**

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சிவகாசி நகரமானது பட்டாசு மற்றும் அச்சுத் தொழிலுக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. குட்டி ஜப்பான் என்றும் இந்நகரம் அழைக்கப்படுகிறது. சிவகாசிநகரிலிருந்துதிருவில்லி புத்தூர் செல்லும் சாலையில் உள்ள சாட்சியாபுரத்தில் அமைந்திருக்கும் இரயில்வே கேட் ஒவ்வொரு முறையும் மூடப்படும்போது, பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வந்ததோடு, பள்ளி மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களும், அவசரமாக மருத்துவமனை செல்லும் மக்களும் நீண்டநேரம் காத்திருக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு, இம்மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றும், அவர்களது சிரமத்தை போக்குவதற்காகவும், சிவகாசி மற்றும் திருவில்லிபுத்தூர் இரயில்வே நிலையங்களுக்கு இடையே சாட்சியாபுரத்தில் புதிய மேம்பாலம் கட்டுவதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தர விட்டார்கள். அந்த உத்தரவிற்கிணங்க, திருவில்லிபுத்தூர் - சிவகாசி - விருதுநகர் - அருப்புக்கோட்டை - திருச்சுழி - நரிக்குடி - பார்த்திபனூர் சாலையில் இரயில்வே கேட் எண். 427க்கு மாற்றாக திருவில்லிபுத்தூர் மற்றும் சிவகாசி இரயில் நிலையங்களுக்கிடையே சாட்சியாபுரத்தில் 61கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் புதிய மேம்பாலம் கட்டப்பட்டு, அதை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.11.2025) திறந்து வைத்தார்.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த தியாகி சங்கரலிங்கனார் அவர்கள் விடுதலைப் போராட்ட வீரரும், மதராசு மாநிலம் என்று அழைக்கப்பட்ட மாகாணத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டுவதற்காக, தனது வீட்டின் முன்பு 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் துறந்தவரும் ஆவார். அன்னாரது தியாகத்தைப் போற்றும் வகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று புதிதாகத் திறந்து வைத்த மேம்பாலத்திற்கு “தியாகி சங்கரலிங்கனார் மேம்பாலம்” எனவும் பெயர் சூட்டினார்.

இந்த மேம்பாலத்தினால் சிவகாசியைச் சுற்றியுள்ள சாட்சியாபுரம், ஆனையூர், தேவர் குளம், திருத்தங்கல் உள்ளிட்ட 30 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 5 இலட்சம் மக்கள் பயன் அடைவார்கள்.

மேலும், இம்மாவட்ட மக்களின் முப்பது ஆண்டு கால கனவு முதலமைச்சர் அவர்களால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.




எஸ்.ஐ.ஆர். என்ற தீவிர சிறப்பு வாக்காளர் திருத்தத்தை அவசர அவசரமாக நடத்துவதைக் கண்டித்தும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் ஆணையத்தையும் கண்டித்து தூத்துக்குடி வி.வி.டி. சிக்னல் அருகில், தூத்துக்குடி வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். இதில், காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவர் ஏ.பி.சி.வி சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜீ.வி.மார்க்கண்டேயன், எம்.சி.சண்முகையா, ஊர்வசி அமிர்தராஜ், ம.தி.மு.க. முன்னாள் எம்.பி. சிப்பிப்பாறை ரவிச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகக் குழு உறுப்பினர் சம்பத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.